செய்தி வெளியீடு:42 நாள்: 27.01.2016.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்ற மாவட்ட அலுவலகங்களுக்கான கூடுதல் கட்டிட கட்டுமானம் பணிகளையும், இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு துறையில் செயல்பட்டு வருகின்ற அனைத்து விளையாட்டு கட்டமைப்புகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் திரு.ச.நடராஜன், இ.அ..ப. அவர்கள் 27.01.2016 அன்று ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்ற மாவட்ட அலுவலகங்களுக்கான கூடுதல் கட்டிட கட்டுமானமப் பணிகளையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இராமநாதபுரம் மாவட்ட பிரிவில் ரூ.614.72 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை ஹாக்கி மைதானம் அதன் நீர்த் தெளிப்பான்களை இயக்கும் முறை, தொடர்ந்து இறகுப்பந்து மைதானம், டென்னிஸ் மைதானம், கூடைப்பந்து மைதானம் புதிதாக உருவாகி வருகின்ற கேரம் மற்றும் செஸ் உள் விளையாட்டரங்கம் ஆகியவற்றை பார்வையிட்டு அவற்றின் பணிகளை விரைந்து முடிக்குமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந் நிகழ்வின் போது உதவி செயற்பொறியாளர் திரு. குருதிவேல்மாறன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.இராமசாமி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.க.சேவியர்ஜோதிசர்குணம், உள்பட பலர் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.